<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண்.374/2022**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>வாக்குமூலம் – பி.வா.சா.1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளிதாஸ் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 31.01.2025 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜனவரி 31ம் நாள் சாட்சியம்.

---

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதி 28.08.2022 தேதியிட்டு வழக்குறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால், ஆமாம். அதன் சங்கதிகளை நான் படித்துப்பார்த்து எனது வழக்கறிஞருக்கு அறிவுறுத்தியதன் பேரில் தான் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால், ஆமாம். வழக்கின் எதிர்வாதத்திலும் எனது பிரமாண பத்திரத்திலும் உள்ள சங்கதிகள் நான் சொல்லியவை தான். வா.சா.ஆ.9 அறிவிப்பில் நான் குடியிருக்கும் வீடு இன்னாருக்கு பாத்தியப்பட்டது, அவர்கள் பெயரில் பட்டா உள்ளது என எந்த சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால், ஆமாம்.

2. வாதி தனது அறிவிப்பில் தனுக்கும், தனது மகள்களுக்கும் பாத்தியப்பட்ட வீடு என அறிவிப்பில் சொல்லியிருந்தார், அதனை மறுத்து நான் பதில் அறிவிப்பில் கூறவில்லை என்றால், ஆமாம். நான் குடியிருக்கும் வீட்டின் புல எண் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள புல எண் நான் சொல்லிதான் எழுதப்பட்டுள்ளது

என்றால், ஆமாம்,வழக்கறிஞரிடம் பட்டா நகல் கொடுத்தேன் தற்போது புல எண் ஞாபகம் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணங்களில் பட்டா உள்ளதா என்றால், இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் தாவா சொத்தானது நகரளவை எண்.1693/16 க்கு கட்டுப்பட்டது என்றும், அதற்கு அருகில் 1693/45 க்கு கட்டுப்பட்ட மனையிடத்தில் ஒரு வீடு உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆலாம்பாளையம் கிராமத்தின் கூட்டு வரைபடம் என்றால், ஆமாம். **மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. ஆலாம்பாளையம் கிராமத்தில் 1693 காலையில் மொத்தம் 42 உட்பிரிவுகள் மட்டுமே உள்ளது என்றால், அது எனக்கு சரியாக தெரியவில்லை. உட்பிரிவு 42 தடமாக வா.சா.ஆ.11 ல் காட்டப்பட்டுள்ளது என்றால், ஆமாம். நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1693/45 என்ற காலை ஆலாம்பாளையம் கிராம வரைபடத்திலேயே இல்லை என்றால், பல்ஹீஸ் பேகத்திற்கு மனுவின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது, அதனால் மேற்படி இடம் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லைஎன்று சொன்னார்கள். மேற்படி விவரம் எனது ஊகத்தின் அடிப்படையல் சொல்கிறேன், அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

5. நான் எனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலும், விவரப் பத்திரிக்கையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மூன்று விதமான சங்கதிகளை சொல்லியுள்ளேன் அதில் எது

சரியானது என்றால், நான் தாவா வீட்டில் குடியில்லை என்பது தான் எனது நிலைப்பாடு. மேற்படி விவரத்தை எனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலும், விவரப் பத்திரிக்கையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை, அவற்றில் நான் தான் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால், இல்லை, நான் அவ்வாறு சொல்லவில்லை.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணம் சௌகத்தலி என்பவர் பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணம் கருப்புசாமி என்பவர் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணம் வீராத்தாள் என்பவர் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.4 ஆவணம் வீராத்தான் என்பவர் பெயரில் செலுத்தப்பட்ட குடிநீர் கட்டண ரசீது என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.1 நான் நடத்திவரும் சலூன் கடையின் மின் கட்டண ரசீது என்றால், ஆமாம்.

7. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்து சம்பந்தப்பட்டது அல்ல, எனது தாயார் பெயரில் உள்ள வீடு மற்றும் நான் நடத்திவரும் கடை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்றால், ஆமாம். எனது பிரமாணவாக்குமூலத்தில் எனது தாயார் மீனாட்சி, பல்ஹீஸ் பேகத்திற்கு போக்கியத்திற்கு பணம் கொடுத்து 10 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன், அதற்குண்டான போக்கிய பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

8. பல்ஹீஸ் பேகத்திற்கு பாத்தியப்பட்ட இடம் நகரளவை எண்.1693/45 க்கு கட்டுப்பட்டது அதில் தான் எனது தாயார் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம். நான் சொல்லும் பல்ஹீஸ் பேகம் என்பவர் வாதியின் தகப்பனாரின்

உடன்பிறந்த சகோதரி என்றால், ஆமாம். வாதியின் தகப்பனார் பல்ஹீஸ்பேகமும், அவரது கணவரும் வயோதிகம் காரணமாக இறந்துவிட்டனர் என்றால், ஆமாம். பல்ஹீஸ்பேகத்திற்கும், அவரது கணவருக்கும் வாரிசுகள் யாரும்இல்லை.

9. பல்ஹீஸ்பேகத்திம் வழக்கு சொத்து அமைந்துள்ள காம்பவுண்டில் உள்ள ஒரு போர்சனில் தனது கடைசி காலம் வரை இருந்து இறந்து போனார் என்றால், வழக்கு சொத்திற்கு தள்ளி தான் அவர் குடியிருந்த இடம் இருந்தது. பல்ஹீஸ்பேகத்தை வாதி தனது வீட்டிற்கு அழைத்து வந்து அவரது கடைசி காலத்தில் அவருக்கு தேவையான பணிவிடைகளை செய்து வந்தார் என்றால், இல்லை. வாதி தனக்கு பாத்தியப்பட்ட வீட்டின் ஒரு பகுதியில் அத்தையான பல்ஹீஸ்பேகத்தைஅவரது வயோதிக காலம் வரை பராமரித்து வந்து, கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் அவர் இறந்தபின்பு பிரதிவாதியான என்னை வழக்கு சொத்தில் வாடகைக்கு குடியமர்தினார் என்றால், இல்லை.

10. வாடகைக்கு குடிவந்த பின்னர், வாடகையும் செலுத்தாமல், வீட்டையும் காலி செய்ய மறுக்கிறேன் என்றால், நான் அந்த வீட்டில் குடியிருக்கவில்லை. வீடு வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல, வேறு நபருக்கு பாத்தியப்பட்ட வீடு என்பதற்கு எந்த சிறு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். வழக்கு வீட்டை வாதி கேட்ட சமயத்தில் காலி செய்ய இயலாது என்று சொல்லி, வீட்டை பூட்டி வைத்து இரவு நேரங்களில் மது அருந்துவதற்காக பயன்படுத்திவருகிறேன் என்றால், தவறு.

11. வீட்டிற்கு வாடகையும் செலுத்தாமல், வீட்டினை மராமத்து செய்யவும் விடாமல், இடையூறு ஏற்படுத்தி வருகிறேன் என்றால், இல்லை. அதனால் தான் என்னால் ஒரு

குறிப்பிட்டநிலைபாட்டை எடுக்கயியலவில்லை, ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால், தவறு. வா.சா.ஆ.11 ஆவணத்தில் வாதியின் சொத்து 1693/16 காலைக்கு கட்டுப்பட்டது என்றால், ஆமாம். எனக்கு சம்பந்தமில்லாத வீட்டில் நான் குடியிருந்து, வீட்டை காலி செய்யாமல், சட்டத்திற்கு புறம்பாக வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால், தவறு.

12. வழக்கு வீட்டில் எனது தாயார் குடியிருந்து வருவதாக எனது பதில் அறிவிப்பிலும், பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், ஆமாம். இந்த வழக்கு சொத்தினை நான் பூட்டி வைத்துக்கொண்டு எனது தாயார் அதில் வசிப்பதாக பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தின் அனைத்து ஆவணங்களும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதனால் தான் என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், தவறு.

13. எனது தாயார் குடியிருக்கும் வீட்டிற்குண்டான ஆவணங்கள் அனைத்தும், எனது தாயார் பெயரில் தான் உள்ளது, அது எனது தாயாருக்கு இலவசாமாக கொடுக்கப்பட்ட வீட்டு மனை பட்டாவாகும். எனது பிரமாணவாக்குமூலத்தில் ஜமாதில் பைசல் பேசி பாத்திமாவுக்கு வீடு பாத்தியப்பட்டதுஎ ன சொல்லியுள்ள விவரங்கள் வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால், சரியல்ல. பாத்திமா என்ற நபரே என்னால் கற்பனையாக உருவாக்கப்பட்ட நபர்என்றால், தவறு.

14. அவ்வாறு ஒரு நபர் இருந்திருந்தால் பல்ஹீஸ்பேகத்திற்கும் பாத்திமாவிற்கும் என்ன உறவு முறை என சொல்லியிருப்பேன் என்றால், தவறு. முதலில் எனது தாயார் வழக்கு சொத்தில் குடியிருக்கிறார் என சொல்லிவிட்டு தற்போது எனது தகப்பனாரின் தாயார்

குடியிருப்பதாக மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால், தவறு. தாவா சொத்திற்கு நான் வாடகை மற்றும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால், தவறு. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நீதிமன்ற கேள்வி.**

1. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால்?

16/1, கரூர் மெயின் ரோடு, கரையூர் போஸ்ட், தாராபுரம் ஆகும்.

2. மேற்படி வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால்?

நான் எனது மனைவி எனது குழந்தைகளுடன் குடியிருக்கிறேன்.

3. எனது தாயார் குடியிருக்கும் வீட்டிற்கு நான் எப்போது சென்றேன் என்றால்?

நான் அந்த வீட்டில் தான் தற்போது குடியிருக்கிறேன்.

4. பல்ஹீஸ்பேகம் இறந்த பிறகு எனது தாயார் அந்த வீட்டில் குடியிருப்பதாக எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரம் தவறா என்றால்?

என் தகப்பனாரின் தாயார் அங்கு குடியிருக்கிறார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

MATHIVATHANI VANANGAMUDI

Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2025.01.31 12:51:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.